**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.439/2024**

**வா.சா.–1– கனகலெட்சுமி , த/பெ.வேம்மையா**

**நாள். 12.02.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வீட்டுக் குடித்தனம் செய்கிறேன். நான் ஈட்டுப்பத்திரம் எழுதும் போது குள்ளனம்பட்டியில் இருந்தேன். பிரதிவாதியை 15 வருடமாக எனக்கு தெரியும். பிரதிவாதியின் ஊரில் பிறந்ததால் அவரை எனக்கு தெரியும். நான் 17 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேன். நான் எனது சொந்த சேமிப்பில் உள்ள ரொக்கமாக வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். எனக்கு வங்கி கணக்கு உள்ளது. அந்த வங்கியில் கையிருப்பு பணம் இருந்ததா என்றால் இருந்தது. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய முடியும். நான் 17 லட்சம் கொடுத்ததற்கான பணம் எனக்குஎவ்வாறு வந்தது என்றால் என் கணவரின் சம்பாத்தியத்தில் சேர்த்த பணம் . ஈட்டுக் கடன் சொத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்த்திருக்கிறேன். அதில் எவ்வளவு வருமானம் வருகிறது என்று எனக்கு தெரியாது. ஈட்டுக் கடன் இடத்தின் விஸ்தீரணம் தெரியாது. அதில் என்ன பயில் நட்டுள்ளார்கள் என்றால் தேக்கு மரங்கள் இருந்தது. எத்தனை இருந்தது என்று தெரியாது. ஈட்டுக் கடன் சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

ஈட்டுக் கடனின் ரொக்கம் கொடுத்ததாக எழுதவில்லை என்றால் சரிதான். ஈடு கடனில் நான் ரொக்கமாக பணம் வங்கி கணக்கு மூலமாக பரிவர்த்தனை செய்துள்ளது என்றால் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க ரொக்கமாக கொடுத்து விட்டு வங்கி கணக்கு மூலம் செலுத்தியதாக ஈட்டுக் கடன் பத்திரத்தில் போடப்பட்டது. உண்மையில் என்னிடம் பிரதிவாதி ரொக்கமாக பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ.17 லட்சம் கொடுத்தேன் அதில் அனைத்து நோட்டுகளும் கலந்து கொடுத்தேன்.என்ன நோட்டுக்கள் என்று ஞாபகம் இல்லை. ரொக்க பணம் பத்திர அலுவலகத்தில் வைத்து கொடுத் பின்புதான் பிரதிவாதி கையெழுத்திட்டார். உண்மையில் பிரதிவாதியின் வங்கி கணக்கில் பணம் செலுத்துவதாக சொல்லி ஈட்டுக் கடன் பத்திரத்தில் கையெழுத்து என்றால் சரியல்ல. உண்மையில் எந்த ரொக்கப்பணமும்

என்னிடம் இல்லை என்றாலும் பணம் கொடுப்பதாக சொல்லித்தான் கையெழுத்து பெற்றேன் என்றால் சரியல்ல. என் கணவர் ஆர்மியில் பணி செய்கிறார். மாத வருமானமாக ரூ-1லட்சம் வரும். இன்றளவிலும் என் வங்கி கணக்கில் பணம் இல்லை என்றால் சரிதான். எனக்கு மாதாந்திர செலவு எவ்வளவு என்றால் ரூ.10 ஆயிரம் ஆகும். பிரதிவாதியை ஏமாற்றி வங்கி கணக்கில் பணம்செலுத்துவதாக சொல்லி ஈட்டுக் கடன் பத்திரத்தில் கையெழுத்து பெற்றேன் என்றால் சரியல்ல.

நான் பணம் கொடுத்த போது யார் உடனிருந்தார்கள் என்றால் சின்னப்பன், ஜெயராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள். நான் ரொக்கம் கொடுத்ததற்கு இரசீது ஏன் வாங்கவில்லை என்றால் பணம் கொடுத்தவுடன் ஈட்டுக் கடன் பத்திரம் பதிவு செய்ததால் இரசீது வாங்கவில்லை. உண்மையில் நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும் தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் நான் தாக்கல் செய்த வழக்கில் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை- இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:13:05 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.